# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய பொருளாதாரம்

பகுதி : **பொது நிதியியல் மற்றும் நிதியியல் கொள்கை, வரி நிர்வாக அமைப்பு**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# பொது நிதியியல் மற்றும் நிதியியல் கொள்கை

## பொது நிதியியல் மற்றும் நிதியியல் கொள்கை

- பொது நிதியியல் அல்லது அரசின் நிதி என்பது பொருளாதாரத்தின் ஒரு கிளையாகும். இது ஆண்டு நிதிநிலை அறிக்கை (Budget), அரசின் வருவாய் மற்றும் செலவினங்கள் பற்றியதாகும். இது அரசின் நிதியியல் கொள்கை பற்றியதாகும். இக்கொள்கை அரசின் வரிக்கொள்கை, அரசின் செலவினம் மற்றும் பணக் கொள்கையோடு (Monetary Policy) சேர்ந்ததாகும். இக்கொள்கை பொருளாதார கோட்பாடு (Economic theory) மற்றும் பொதுநிதிக் கோட்பாட்டோடும் (Theory of Public Finance) இணைந்ததாகும்.
- பேராசிரியர் டால்டன் (Dalton) "பொதுநிதி என்பது அரசின் வருவாய் மற்றும் செலவினங்கள் பற்றியதாகும். இவை ஒன்றோடு ஒன்று சரிசெய்து கொள்ளும்" என வரையறை தந்துள்ளார்.
- பேராசிரியர் பின்லே சிராஸ் (Findlay shirras) "பொது நிதி என்பது அரசின் செலவின கொள்கையையும், நிதிப் பெருக்கத்தையும் பற்றியதே ஆகும்" என வரையறை தந்துள்ளார்.

## பொது நிதியியல்

- அக்வொர்த் குழு பரிந்துரையின் படி இருப்புப் பாதை நிதியறிக்கை பொது நிதியறிக்கையிலிருந்து 1921-ஆம் ஆண்டு முதல் பிரித்து தனியாகச் சமர்பிக்கப்பட்டது.
- அவ்வாறு பிரித்த போது இருப்புப் பாதை துறை செலவிற்கான மானியக் கோரிக்கை பொதுநிதி அறிக்கைக்கு முன்பாகவே நாடாளுமன்றத்தில் தனியாகச் சமர்பிக்கப்பட்டது.
- பின்னர், 2016-17 பட்ஜெட்லிருந்து இருப்புப் பாதை மற்றும் பொது நிதியறிக்கை இணைக்கப்பட்டு ஒரே பட்ஜெட் ஆக சமர்பிக்கப்படுகிறது. இந்த இணைப்பு பிபேக் தேப்ராய் குழுவின் பரிந்துரைப்படி நடைப்பெற்றது.
- இந்திய அரசியல் சாசனப் பிரிவு 112-ன் படி மத்திய அரசும், 202ன் படி மாநில அரசும் ஆண்டு நிதியறிக்கையை தங்களின் சட்ட அவைகளில் சமர்ப்பிக்க வேண்டும்.
- இம்மாதிரியான நிதியறிக்கை மூன்று வருடங்களுக்கான கணக்கைக் கொண்டிருக்கிறது. அவை,

1. முந்தைய நிதியறிக்கை இறுதிக் கணக்கு
2. நடப்பு ஆண்டிற்க்கான நிதியறிக்கை மதிப்பீடு மற்றும் மறு மதிப்பீடு
3. அடுத்த ஆண்டிற்க்கான நிதியறிக்கை மதிப்பீடு

- ▶ முந்தைய இரு ஆண்டுகளுக்கு கணக்கின் அடிப்படையில் நடப் பாண்டிற்க்கான நிதியறிக்கை மதிப்பீடு செய்யப்படுகிறது.
- ▶ **வருவாய்:** ஒரு தனிநபர் பெறும் ஊதியம் வருவாய் ஆகும்.
- ▶ **வரவு:** இதுவருவாயோடு மற்ற வற்றையும் உள்ளடக்கியதாகும், எடுத்துக் காட்டாக, மற்றவரிடமிருந்து பெறும் கடனும் வரவில் அடங்கும், கடன் என்பது திருப்பி அளிக்க வேண்டியது ஆகும்.
- ▶ **வருவாய் வரவு:** அரசின் சொத்துக்களிலிருந்து வரும் வருமானம் மற்றும் அரசு திருப்பித் தரத் தேவையில்லாத வரவுகள் வருவாய் வரவு என அழைக்கப்படுகிறது. இவை ஓர்வழி பணப்பரிமாற்றம் ஆகும்.

**I.வரி வருவாய்**

- ▶ மத்திய அரசு விதிக்கும், வருமான வரி, இறக்குமதித் தீர்வை போன்றவற்றால் கிடைக்கும், வரவு வரிவருவாய் என்று அழைக்கப்படுகிறது.
- ▶ (எ.கா) சரக்கு மற்றும் சேவைவரி மத்திய ஆயத் தீர்வை, சுங்கத் தீர்வை, வருமான வரி, சேவை வரி, மத்திய ஆட்சிப் பகுதிகளின் வரிகள், இதர வரிகள் என அனைத்தும் அடங்கும்.

**2.வரியில்லா வருவாய்**

- ▶ வரி மட்டும் அல்லாமல் இதர வழிகளின் மூலமாக பெறப்படும் வரவு **வருவாய் வரவு** ஆகும். (எ.கா)
- ▶ வழங்கிய கடனிலிருந்து பெறப்படும் வட்டி
- ▶ அரசு கொண்டிருக்கும் பங்குகளின் மூலம் கிடைக்கும் இலாபம் மற்றும் இலாப ஈவு ஆகியன அடங்கும்.

**பொது நிதியறிக்கை**

- வரவு
  - வருவாய் வரவு
    - வரி வருவாய்
    - வரியில்லா வருவாய்
    - இதர வரியில்லா வருவாய்
  - மூலதன வரவு
    - க ட ன் மூலதனவரவு
    - க ட ன ல் ல ா மூலதனவரவு
- செலவு
  - வருவாய் செலவு
    - வட்டி செலுத்தல்
    - இராணுவம்
    - ஊதியம் மற்றும் சில
  - மூலதன செலவு
    - சொத்து விற்பனை
    - கடன்களை திரும்பப் பெறுதல்

**3. இதர வரியில்லா வரவு:**

- நாணயம் மற்றும் காகிதப் பணம் அச்சடித்துப் புழக்கத்தில் விடுவதன் மூலம் அரசு இலாபம் ஈட்டுகிறது. தயாரிப்புச் செலவுக்கும் அவற்றின் மதிப்புக்கும் உள்ள வேறுபாடு இலாபம் ஆகும்.
- (எ.கா) ஐந்து ரூபாய் நாணயத்தைத் தயாரிக்க ஆகும். செலவு 50 பைசா என்றால் அரசின் இலாபம் ரூ.4.50 ஆகும்.

## மூலதன வரவு:

- இது மூலதனச் சொத்துக்களை விற்பது கொடுத்த கடனைத் திரும்பப் பெறுவது மற்றும் கடன் வாங்குதல் மூலம் பெறப்படுகிறது. இவை இருவழிப் பணப் பரிமாற்றங்கள் ஆகும்.

**I. கடன் மூலதன வரவு:**

- அரசு வாங்கும் கடன் மற்றும் இதரக் கட்டுப்பாடுகள் இவ்வகையில் அடங்கும்.
- கடன்கள் அல்லது பொதுக்கடன்கள் இந்தியப் பொதுநிதியின் பலம் கொண்டு வாங்கப்படுகின்றன.
- பல்வேறு மூலங்களிலிருந்து பல்வேறு சாதனங்கள் கொண்டு உள்நாட்டில் வாங்கப்படும் அவைகளில் நிகரச் சந்தைக் கடன், கருவூல உண்டியல் வழிவகைக் கடன்கள், சிறுசேமிப்பின் மீதான கடன்கள் என அனைத்தும் அடங்கும்.

**2. கடனல்லா மூலதன வரவு:**

- அரசின் சொத்துக்களை, பங்குகளை விற்பது, கொடுத்த கடனைத் திரும்பப் பெறுதல் மூலம் பெறப்படும் வரவு கடனல்லா மூலதன வரவு ஆகும். பொதுத்துறை நிறுவனங்கள் தவிர்த்து விற்கப்பட்ட பங்குகள்

## செலவு:

**வருவாய்ச் செலவு:**

- அரசின் தினசரித் தேவைகளை எதிர்கொள்ள மேற்கொள்ளப்படும் செலவுகள் வருவாய்ச் செலவுகள் ஆகும்.
- இம்மாதிரியான செலவுகள் வருவாய் அளிக்கும் சொத்துக்களை உருவாக்கு வதில்லை.
- இவை ஒரு வழிப் பணப் பரிமாற்றம் ஆகும். (எ.கா)
  - வட்டி செலுத்திய தொகை
  - இராணுவம் மற்றும் காவல்துறைக் கான செலவுத் தொகை
  - அரசு வழங்கும் மானியம்
  - மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசுப் பகுதிகளுக்கான நிதி
  - ஓய்வூதியம் மற்றும் ஊதியம் வழங்கிய தொகை

**மூலதனச் செலவு:**

- இது பொதுவாக, நிரந்தரச் சொத்துக் களை உருவாக்கும் செலவுகள் மற்றும் தொடர் வருமானத்தை தரும் சொத்துக்களை உருவாக்கும் செலவுகள் மற்றும் மாநில அரசுகள் மற்றும் பஞ்சாயத்து நிர்வாக அமைப்புகளுக்கு அளிக்கப்படும் கடன்கள் மூலதனச் செலவுகள் என்றழைக்கப்படுகின்றன.

## பொது நிதிக் கொள்கையின் உள்ளடக்கங்கள் (Subject Metters)

1. பொதுச் செலவு (Public Expenditure)
2. பொது வருவாய் (Public Revenue)
3. பொதுக் கடன் (Public Debt)
4. நிதிநிர்வாகம் (Financial Administration)
5. கூட்டாட்சி முறை (மத்திய-மாநில நிதி உறவுகள்) (Federal Finance)

**I. பொதுச் செலவு**

- நவீன அரசு ஒரு நல அரசு (Welfare State) எனவே அதிகபட்ச பொது நலத்தை நிலைநாட்ட அரசு பலவிதமான பணிகளை மேற்கொள்ளும். இதனால் அரசுக்கு பணச் செலவுகள் ஏற்படும். இத்தகையான பொதுச் செலவு எனப்படும்.

**2. பொது வருவாய்;**

- அரசு பெறுகின்ற வருவாய் பொது வருவாய் எனப்படும். இது வரி வருவாய், வரி அல்லாத வருவாய் ஆகியனவற்றை உள்ளடக்கியது.
- வரி வருவாய் என்பது பலவகையான வரிகள், வரித் தாக்கம் (Impact) மற்றும் வரி நிகழ்வுகள் (Incident) பற்றியதாகும்.
- வரியில்லாத வருவாய் என்பது

1. வணிக வருவாய் (பொதுத்துறை யின் விற்பனையால் கிடைத்த வருவாய் மற்றும் இலாபம்)
2. நிர்வாக வருவாய் (கட்டணங்கள், அனுமதிக் கட்டணங்கள், சிறப்புத் தீர்வைகள்)
3. வெகுமதி மற்றும் மானியங்கள்.

## 3. பொதுக் கடன்

- அரசின் வருவாயானது செலவினங் களை விட குறையும் போது அரசானது உள்நாடு மற்றும் வெளி நாடுகளிலிருந்து கடன் வாங்க உந்தப்படுகிறது.
- உள்நாட்டுக் கடன் என்பது அரசு பொது மக்களிடமிருந்தும், வணிக வங்கிகளிட மிருந்தும், மைய வங்கிகளிடமிருந்தும் கடன் பெறுவதாகும்.
- வெளிநாட்டுக்கடன் என்பது அரசு, உலக வங்கி (World Bank), பன்னாட்டு நிதி நிறுவனம் (IMF – International Monetary Found) மற்றும் அயல் நாடுகளிடம் இருந்தும் பெறுகின்ற கடனாகும்.

**4. நிதி நிர்வாகம்**

- அரசின் நிறுவனங்கள், அரசின் பணிகள் மற்றும் அரசின் இயந்திரங் களோடு சார்ந்த நிதி நடவடிக்கைகளே நிதி நிர்வாகமாகும். மேலும் வரவு- செலவு திட்டங்களை வடிவமைத்தல், உருவாக்குதல், ஒப்பளித்தல், மற்றும் பாராளுமன்றம், சட்டமன்றங்களில் தாக்கல் செய்தல், தணிக்கை செய்தல், நடைமுறைப் படுத்துதல் ஆகியனவும் இதில் அடங்கும்.

**5. கூட்டாட்சி நிதி**

- பொது நிதியின் ஒரு உட்பிரிவே கூட்டாட்சி நிதியாகும். கூட்டாட்சி என்பது இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட அரசுகளின் கூட்டமைப்பு. இதில் மைய, மாநில மற்றும் உள்ளூர் அரசுகள் ஒருங்கிணைந்துள்ளன. இது இவ்வரசுகளிடையே நிலவுகிற நிதி உறவு முறைகள் பற்றியும், அதனுடன் சம்பந்தமுடைய பிரச்சனைகள் பற்றியும் ஆராய்கிறது.

## ஆண்டு நிதிநிலை அறிக்கை (The Budget)

- இந்தியாவில் நிதித்துறை அமைச்சகம் நாட்டின் நிதிக் கொள்கையை (Fiscal Policy) முடிவு செய்கிறது. பட்ஜெட் எனப்படும் ஆண்டு வரவு செலவு அறிக்கையே நாட்டின் நிதிக் கொள்கைக்கு எடுத்துக்காட்டும் முக்கிய அம்சமாகும்.
- பட்ஜெட்டுக்கு முந்தைய நாள் மார்ச் 28 அன்று நிதி அமைச்சகம் முந்தைய

நிதி ஆண்டின் பொருளாதார ஆய்வு அறிக்கையை (Economic Survey) வெளியிடுகிறது. ஒரு நிதியாண்டு என்பது ஏப்ரல் 1 முதல் மார்ச் 28 வரை உள்ள காலகட்டமாகும்.

- ▶ பட்ஜெட் என்ற சொல்லானது பிரெஞ்சு மொழி சொல்லான "Bongette" என்ற சொல்லிலிருந்து உருவானது. இதன் பொருள் "சிறிய பை" என்பதாகும். பாராளுமன்றத்தில் (மாநில சட்டமன்றத்திலும்) வரவு செலவு திட்டத்தை தாக்கல் செய்ய நிதி அமைச்சர்கள் அறிக்கையை இதில் வைத்துதான் கொண்டு செல்வார்கள். இதில் அரசின் நிதிக் கொள்கைகள், வரிக் கொள்கைகள், மூலதன பிறப்பிடங்கள், சேமிப்பு அளவுகள், வளங்களின் பயன்பாடுகள் மற்றும் மூலதன ஆக்கங்கள் பற்றிய விளக்கங்கள் இடம்பெறும்.

**பற்றாக்குறை**

- ▶ செலவிற்கும் வரவிற்கும் இடையேயான இடைவெளி பற்றாக்குறை எனப்படுகிறது.
- ▶ பல்வேறு வகையான பற்றாக்குறைகள் உள்ளன. அவை,

1. மொத்த பற்றாக்குறை = மொத்த செலவு - மொத்த வரவு
2. வருவாய் பற்றாக்குறை = வருவாய் செலவு - வருவாய் வரவு
3. நிதிப் பற்றாக்குறை = மொத்தச் செலவு - (கடன் மற்றும் இதரக் கடப்பாடுகள் தவிர்த்த மூலதன வரவு + வருவாய் வரவு)
4. முதன்மைப் பற்றாக்குறை = நிதிப்பற்றாக்குறை - வட்டிச் செலவு
5. பணமாக்கப்பட்ட பற்றாக்குறை = இந்தியாவின் இருப்பு வங்கிகளிடமிருந்து வாங்கிய கடன் + இருப்பிலிருந்து எடுத்த தொகை

**பட்ஜெட்:**

**வரவு செலவு திட்டத்தின் வகைகள்: (Kinds of Budget)**

1. சமநிலை வரவு-செலவு திட்டம் (Balance Budget) (இதில் அரசின் வருவாயும் செலவும் சரியாக இருக்கும்)
2. சமனற்ற வரவு-செலவு திட்டம் (Unbalanced Budget) (இதில் அரசின் வருவாய் செலவை விட அதிகமாகவே (அ) குறைவாகவோ இருக்கும்)

- ▶ சமனற்ற வரவு செலவு திட்டத்தில் பொது வரவை விட பொது செலவினங்கள் குறைவாக இருந்தால் அது "உபரி வரவு-செலவு திட்டம்" எனவும், பொது வரவைவிட பொது செலவினங்கள் அதிகமாக இருந்தால் அது "பற்றாக்குறை வரவு-செலவு திட்டம்" எனவும் அழைக்கப்படும்.
- ▶ நவீன பொருளியல் வல்லுநர்கள் சமனற்ற வரவு-செலவு திட்டமே நாட்டின் பொருளாதாரம் சமநிலையை அடையவும் அந்நிலையை தொடரவும் உதவும் என கருதுகின்றனர்.

**வருவாய் வரவு-செலவு திட்டம்** (Revenue Budget)

- ▶ அரசின் வருவாய் வரவுகளும் அவற்றிலிருந்து செய்யப்படும் வருவாய் செலவுகளும் அடங்கும். சொத்தினை உருவாக்காத அத்தனை செலவினங்களும் வருவாய் செலவினம் என்று அழைக்கப்படும். (எ.கா) அரசுத்துறை சார்பான செலவுகள், நடப்பு

வருவாயும் செலவினங்களும், அரசின் பொதுக்கடன் மீதான வட்டி மற்றும் வளர்ச்சி சாரா செலவினங்கள்)

**மூலதன வரவு-செலவு திட்டம் (Capital Budget)**

- அரசு செய்யும் செலவுகளில் பெரும் பகுதி மூலதன செலவுகள் ஆகும். மூலதன வரவுகள் மற்றும் மூலதன செலவுகள் ஆகியன மூலதன பட்ஜெட்டில் அடங்கும். அங்காடிக் கடன்கள், RBI யிடம் இருந்து பெறும் கடன்கள், கருவூல உண்டியல்கள், அயல்நாட்டு அரசுகள், நிறுவனங்கள் போன்றவற்றிலிருந்து பெறுகின்ற கடன்கள் ஆகியன அரசின் மூலதன வருவாய்களாகும். அரசுக்கு சொந்தமாக நிலம், கட்டிடம், இயந்திர தளவாடங்கள் வாங்குதல், முதலீடுகள் மற்ற அரசு கம்பெனிகளுக்கும் மாநில அரசுகளுக்கும் வழங்கப்படும் கடன்கள் போன்றவை மூலதன செலவினங்களில் அடங்கும்.

**செயல் திறன் வரவு செலவு திட்டம்(Performance Budgeting)**

- அது அரசாங்கத்தின் பொது செலவினங்களை சார்ந்த பணிகள், காரியங்கள், செயல் வடிவங்கள், திட்டங்கள், நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கி அரசு மேற்கொள்ளும் அடிப்படையான அரசின் செலவினங்களை பிரதிபலிக்கிறது.

**பூஜ்ய வரவு செலவு திட்டம் (Zero Budget)**

- இதில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு புதிய ஆண்டாக எடுத்துக் கொள்ளப்படும். கடந்த சில நிகழ்வுகளை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. இத்திட்டம் பூஜ்யத்தை அடிப்படையாகக் கொண்டு முழுமையானதாகவும் புதியதாகவும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## நிதியியல் கொள்கை (Fiscal Policy)

- இந்தியாவில் நிதித்துறை அமைச்சகம் நாட்டின் நிதிக் கொள்கையை முடிவு செய்கிறது. பட்ஜெட் எனப்படும் ஆண்டு வரவு செலவு அறிக்கையே நாட்டின் நிதிக்கொள்கையை எடுத்துக்காட்டும் முக்கிய அம்சமாகும். நாட்டுக்கு வரக்கூடிய பல்வேறு வருமானங்கள் "அரசியல் அமைப்பு சட்டத்தின் 266 வது" உறுப்புப்படி அமைந்துள்ள திறள் நிதியில் வரவு வைக்கப்படுகின்றன. இந்த பணத்தை செலவளிக்க பாராளு மன்றத்தின் ஒப்புதல் பெறவேண்டும். இதற்காக அரசியலமைப்புச் சட்ட உறுப்பு 112 ன் படி ஆண்டு நிதிநிலை அறிக்கை நிதியமைச்சரால் ஒவ்வொரு ஆண்டும் மக்களவையில் தாக்கல் செய்யப்படுகிறது.

### நிதிக் கொள்கையின் நோக்கங்கள்

1. வளங்களை திரட்டி பொதுத்துறையில் நிதி ஆதாரங்களை பெருகச் செய்தல்.
2. தனியார் துறையை வளர்ச்சி அடையச் செய்தல்.
3. வளங்களை உத்தம அளவில் பயன்படுத்துதல்.
4. பணவீக்கத்தை கட்டுப்படுத்தி பொருளாதாரத்தை நிலைப்படுத்துதல்.
5. வருமானம் சொத்துப் பகிர்வில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்.
6. முழு வேலைவாய்ப்பை அடைதல் மற்றும் பொருளாதார வளர்ச்சி.
7. நிதிக் கொள்கையும் மூலதன ஆக்கமும்.

## நிதிகளின் வகைகள் (Kinds of Funds)

1. இந்திய திரள் நிதி (Consolidated Fund of India)
2. இந்திய அவசர கால நிதி (Contigency Fund of India)

**I. இந்திய திரள் நிதி**

- இதில் நாட்டின் வருவாய்கள் அனைத்தும் வரவு வைக்கப்படும். இதிலிருந்து செலவளிக்கப்படும் செலவினங்கள் மானியக் கோரிக்கைகளாக மக்களவையில் நிறைவேற்றப்படுகிறது. ஓட்டெடுப்பின்றி திரள் நிதியில் நேரடியாக சேர்க்கப்படும் செலவினங்களை சாட்டப்பட்ட செலவினங்கள் (Charged Expenditure) என்கிறோம். குடியரசு தலைவர், உச்ச, உயர் நீதிமன்ற நீதிபதிகள் (இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டபடி) ஊதிய செலவினங்கள் வழங்குவதற்கு மக்களவையில் ஓட்டெடுப்பு நடத்தத் தேவையில்லை.

**2. இந்திய அவசரகால நிதி**

- எதிர்பாராத அவசர செலவுகளுக்கு குடியரசு தலைவர் அவசரகால நிதியிலிருந்து பணம் வழங்குவார். அவசர கால நிதியிலிருந்து பெறப்பட்ட பணம் பாராளுமன்றத்தின் திரள் நிதியிலிருந்து பெறப்பட்டு அவசரகால நிதிக்கு அளிக்கப்படுகிறது.

### நிதிப்பொறுப்பு மற்றும் நிதி நிர்வாக மேலாண்மைச் சட்டம், 2003 FRBM (Fiscal Responsibility and Budget Management) Act, 2003

**சிறப்பியல்புகள்:**

- அரசுநிதி மற்றும் வருவாய் பற்றாக்குறையை போக்குவதற்கு 31 மார்ச் 2008குள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் பிறகு வருவாய் உபரியாக மாற்ற வேண்டும்.
- இச்சட்டத்தின் கீழ் விதிகளை வகுத்து வருடாந்திர இலக்குகளை நிர்ணயிக்க வேண்டும். அதில் நிதிப்பற்றாக்குறையை 0.3 சதவீதமாகவும், வருவாய் பற்றாக் குறையை 0.5 சதவீதமாகவும் குறைக்க வேண்டும்.
- தேசியபாதுகாப்பு மற்றும் பேரிடர் அல்லது விதிவிலக்கான காரணங்கள் போன்ற காலங்களில் நிதி மற்றும் வருவாய் பற்றாக்குறையானது இலக்குகளைத் தாண்டிச் செல்லலாம்.
- RBI-யிடமிருந்து குறிப்பிட்ட வழி மற்றும் முறைமுன் பணம் (Ways and Means Advances) (WMAs) வழிகளை தவிர அரசுகடன் பெறக்கூடாது.
- 2006-07லிருந்து அரசுபத்திரத்தை RBI யிடமிருந்துபெறாமல் சந்தையில் பெறுவது.
- நிதிசார்ந்த செயல்பாடுகளில் அதிக வெளிப்படைத் தன்மையை உறுதிபடுத்த வேண்டும்.
- ஒவ்வொரு நிதியாண்டிலும் அரசு நாடாளுமன்றத்தில் நிதிநிலையறிக்கை, மானியக் கோரிக்கை இவற்றுடன் கீழ்வரும் மூன்று அறிக்கையும் அளிக்க வேண்டும்.

1. நிதிக் கொள்கையுக்தி அறிக்கை (FPSS-Fiscal Policy Strategy Statement)
2. இடைக் காலநிதிக் கொள்கை அறிக்கை (MTFPS – Medium Term Fiscal Policy statement).

**அட்டவணை 4.2 : நிதிப் பற்றாக்குறையை நீக்க இந்திய அரசின் இலக்கு**

| | செயல்பாடு 2015-16 நிதிநிலை அறிக்கையில் இலக்கு | அக்டோபர் 2012ன் இலக்கு | FFC இலக்கு நிர்ணயம் |
|---|---|---|---|
| 2014-15 | 4.1% | 4.2% | 4.1% |
| 2015-16 | 3.9% | 3.6% | 3.6% |
| 2016-17 | 3.5% | 3.0% | 3.0% |
| 2017-18 | 3.0% | NA | 3.0% |

- சமீபத்தில் நிதி செயல்பாடுகளிலிருந்து இந்தியா கற்றுக்கொண்ட பாடம் என்ன?
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதிப்பற்றாக்குறையின் இடைக்கால இலக்கான 3 சதவீகிதத்தை இந்தியா அடைய வேண்டும். வருவாய் பற்றாக்குறையை நீக்குதல் என்ற நிலையை உருவாக்கி கடன் வாங்குதல் என்பது முதலீட்டு திரட்டிற்காக மட்டுமே என்ற நிலையை உருவாக்குதல்.
- இவ்விலக்குகளை அடைய செலவீனக் கட்டுப்பாடு மற்றும் நுகர்வு செலவீனத்திலிருந்து முதலீடாக மாற்ற வேண்டும்.
- இறுதியாக குறைந்த மற்றும் இடைக்கால நிதி இலக்குகளை அடைய பெட்ரோலிய பொருட்கள் மீதான வரியை அதிகரித்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரியின் விகிதத்தை அதிகரித்தல்.

# வரி நிர்வாக அமைப்பு

## வரி என்பதன் பொருள்

- ஒரு குடிமகன் (அ) நிறுவனம் அரசுக்கு கட்டாயமாக செலுத்தும் தொகையே வரி எனப்படும்.
- பேராசிரியர் செலிக்மேன் (Seligman) ”வரி என்பது ஒரு குடிமகன் அரசுக்கு கட்டாயமாக செலுத்தும் செலுத்துகை. அரசிடமிருந்து எவ்வித நேரடி நன்மையும் எதிர் பார்க்காமல், கட்டாயமாக செலுத்த வேண்டியதே வரி எனப்படும்” என்று கூறுகிறார்.

## ஆடம் ஸ்மித்தின் வரிவிதிப்பு விதிகள்

### I. சமத்துவ விதி

- ஒருவன் தன் சக்திக்கேற்ப வரி செலுத்துவதே இதன் கொள்கை ஆகும். அதாவது ஏழைகள் மீது குறைவாகவும் செல்வந்தர்கள் மீது அதிகமாகவும் வரி விதித்தல் வேண்டும் என்கிறது.

### 2. தெளிவு விதி

- ஒருவன் தான் செலுத்த வேண்டிய வரியின் அளவு எப்பொழுது யாரிடம் செலுத்த வேண்டும் என்பதையும் தெரிந்திருக்க வேண்டும் என்கிறது.

### 3. வசதி வரி

- வரி செலுத்துவோருக்கு பாரம் இல்லாமல் வசதியாக இருத்தல் வேண்டும். (எ.கா) சம்பளத்திலிருந்து பிடிக்கப்படும் வருமான வரி, பொருட்களை வாங்கும்போதே பெறப் படும் பண்டங்கள் மீதான வரி, அறுவடையோடு பெறப்படும் நிலவரி முதலியன.

### 4. சிக்கன விதி

- இது வரி விதிப்பதிலும், வசூலிப்பதிலும் அதிக பணம் விரயமாகாமலிருக்க வேண்டும் என்கிறது.

### 1. வரி

- விகித வரிவிதிப்பு முறை
- வளர்வீத வரிவிதிப்பு முறை
- தேய்வீத வரி விதிப்பு முறை,
- மீத வளர்வீத வரிவிதிப்பு முறை

### விகித வரிவிதிப்பு முறை

**(Propotional Tax)**

- இவ்விதமான வரிவிதிப்பு முறையில் வருமானம் அதிகமானாலும் குறைந் தாலும் வரி விதிப்பில் மாற்றம் இல்லாமல் நிலையானதாக இருக்கும். ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்கும் ஒரே மாதிரியான வரிவிகிதம் விதிக்கப்படும்.

**வளர்வீத வரிவிதிப்பு முறை**
(Progressive Tax)

- இம்முறையில் வருமானத்தின் அடிப்படைத்தளம் அதிகரிக்கும் போது வரியும் அதிகரிக்கும்.
- வருமானம் அதிகரித்தால் வரியும் அதிகரிக்கும், (எ.கா) வருமான வரி.

**தேய்வுவீத வரிவிதிப்பு முறை** (Regressive Tax)

- இம்முறையில் வருமானம் அதிகரிக்கும் போது செலுத்த வேண்டிய வரியின் அளவு குறையும். இம்முறையில் பணக் காரர்களை விட ஏழைகள் மீதான வரிச்சுமை அதிகமாக இருக்கும் எனவே இது நியாயமற்றது.

**நேர்மாற்று வளர்வீத வரிவிதிப்பு முறை**
(Degressive Tax)

- இது விகித வரிவிதிப்பு வளர்வீத வரிவிதிப்பு ஆகியவற்றின் கலவையே ஆகும். இதில் வருவாய் உயர உயர வரிவீதமும் ஒரு குறிப்பிட்ட அளவு வரை உயர்ந்து பின்பு சீரான நிலையை அடைகிறது.

## 2. நேர்முக மற்றும் மறைமுக வரிகள் (Direct and Indirect Taxes)

- பேராசிரியர் டால்டனின் கூற்றுப்படி ”நேர்முக வரி என்பது யார் மீது வரி விதிக்கப்பட்டதோ, அவரே வரி செலுத்துவதாகும்.
- மறைமுக வரியென்பது ஒருவர் மீது விதிக்கப்பட்டு மற்றொருவர் பகுதியாகவோ (அ) முழுமையாகவோ செலுத்துவதாகும்.
- நேர்முக வரிகள் - வருமான வரி, சொத்துவரி, வெகுமான வரி, தீர்வை வரி முதலியன.
- மறைமுக வரிகள் - சுங்க வரி, விற்பனை வரி முதலியன.

## 3. மதிப்புக் கூட்டு வரி (Value Added Tax)

- 2002-ம் ஆண்டு மாநில நிதி அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப் பட்ட முடிவின்படி VAT கொண்டு வரப்பட்டது.
- ஒரு பொருளுக்கே இரண்டு முறை வரி செலுத்தும் சூழல் ஏற்படுவதை தவிர்க்கவே மதிப்புக்கூட்டு வரி அறிமுகப்படுத்தப் பட்டது.
- முதன் முதலாக VATஐ அறிமுகப் படுத்திய நாடு பிரான்ஸ் ஆகும்.
- இந்தியாவில் ஹரியானா மாநிலம் முதன் முதலில் VATஐ அறிமுகப்படுத்தியது.
- இந்தியாவில் எட்டு மாநிலங்கள் தவிர பிறவற்றில் ஏப்ரல் 2005 முதல் மதிப்புக்கூட்டு வரியானது அறிமுகப் படுத்தப்பட்டது.
- தமிழகத்தில் ஜனவரி 2007 முதல் VAT அறிமுகப்படுத்தப்பட்டது.

**மத்திய அரசால் விதிக்கப்படும் வரிகள் சில**

- வருமான வரி (Income Tax) வேளாண்மை தவிர்த்து.
- உற்பத்திகள் மீதான சுங்க வரி (Excise Duty)
- ஏற்றுமதி இறக்குமதி மீதான கலால் வரி (Customs Duty)
- செலவீனங்கள் மீதான வரிகள் (Expenditure Tax)
- சொத்துக்கள் மீதான வரிகள் (Wealth Tax)
- அன்பளிப்பு வரிகள்; (Gift Tax)
- மூலதனத்தின் மீதான வரிகள் (Taxation on Capital Gains)

**மாநில அரசுகளால் விதிக்கப்படும் வரிகள் சில**

1. நில வருவாய் (Land Revenue)
2. கேளிக்கை வரி (Entertainment Tax)
3. தொழில் வரி (Professional Tax)
4. விற்பனை வரி (Sales Tax)
5. வேளாண் வருவாய் மீதான வரிகள்
6. மதுவகைகள் மீதான ஆயத் தீர்வைகள்
7. முத்திரைத்தாள் வரிகள், நீதிமன்ற மற்றும் பதிவுக் கட்டணம்.
8. கனிமப் பொருள்களின் உரிமங்கள் மீதான வரிகள்.
9. மின் நுகர்வு, விற்பனை மீதான வரிகள்.
10. மத்திய அரசின் மானியங்கள் மீதான வரிகள் முதலியன.

**நேர் முகவரி:**

- **வருமான வரி:** இது தனிநபரின் வருமானத்திற்கு ஏற்ப வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரி வருமான வரி ஆகும்.
- **நிறுவனவரி:** ஒரு பெரிய நிறுவனத்தின் வருமான வரியும் வருமான வரியின் ஒரு பகுதி ஆகும். ஆனால் நிறுவனங்களின் வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரி என்பதால் மிக அதிகமாக வரி வருமானம் வருவதை பிரித்து கணக்கிடப்படுகிறது. அதுவே நிறுவன வரி ஆகும்.
- **பத்திர பரிவர்த்தனைவரி:** இந்த வரியானது பங்குச் சந்தையில் விற்கப்படும் பண்டங்களின் மதிப்பு மீதான வரி ஆகும்.
- **குறைந்தபட்ச மாற்று வரி:** இந்த வரி இலாபம் பெறும் சில நிறுவனங்கள் தங்கள் பங்குதாரர்களுக்கு இலாபத்திலிருந்து பங்கைப் பிரித்துக் கொடுத்துவிட்டு கணக்குகளை அதற்கு ஏற்றவாறு சரி செய்து மிகக் குறைந்த வரியை செலுத்துவது அல்லது வரி விலக்கு, வரிக் கழிப்பு, போன்ற பயன்களால், வருமான வரியே செலுத்தாமல் இருக்கும் நிறுவனங்கள் பூஜ்ய வரி நிறுவனங்கள் எனப்படுகின்றன. இவற்றின் மீது விதிக்கப்படும் வரியே குறைந்தபட்ச மாற்றுவரி ஆகும்.

**விளிம்பு நன்மை வரி**
**(Fringe benefit tax)**

ஊதியமட்டுமல்லாது இதர சலு-கைகளை தனது ஊழியர்களுக்கு வழங்கும் நிறுவனங்களுக்கு அவற்றின் செலவினங்களின் மீது விதிக்கப்படும் வரி.

**ஈவுத் தொகை பகிர்வு வரி**
**(Divident distribution tax)**

பங்கு பத்திரத்தின் மீது நிறுவனங்கள் ஈட்டிய லாபத்தை பங்குதாரர்களுக்கு ஈவுத் தொகையாக வழங்கும் பொழுது விதிக்கும் வரி.

**பங்கு பரிவர்த்தன வரி**
**(Securities transaction t tax)**

வரி விதிக்கக்கூடிய பங்கு பத்திரங்களின் வர்த்தகங்களின் மீது விதிக்கப்படும் வரி.

**சொத்து வரி (Wealth tax)**

சொத்துக்களினால் கிடைக்கப் பெறும் நன்மைக்காக விதிக்கப்படும் வரி. இவ்வரியானது அச்சொத்தின் மீது ஒவ்வொரு வருடமும் விதிக்கப்படும்.

**முதலீட்டின் மீதான லாப வரி (Capital gain tax)**

முதலீட்டை விற்கும் பொழுது கிடைக்கும் லாபத்தின் மீது விதிக்கப்படும் வரி.

## மறைமுக வரி (Indirect tax)

1. விற்பனை வரி (Sales tax) : பொருட்களின் விற்பனையின் பொழுது அவற்றின் மீது விதிக்கப்படும் வரி.
2. மதிப்பு கூட்டு வரி : ஒவ்வொரு நிலையிலும் பொருளின் மதிப்பு அதிகரிக்கும் பொழுது அதன் மீது விதிக்கப்படும் வரியாகும். இதனால் வரி ஏய்ப்பு குறைக்கப்படும்.
3. கலால் வரி : இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் மீது விதிக்கப்படும் வரி.
4. சுங்க வரி : இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீது விதிக்கப்படும் வரி.
5. சேவை வரி: 1994யில் சேவை வரி மத்திய அரசால் விதிக்கப்பட்டது. சேவை செய்பவர்களால் வசூலிக்கப்பட்டு அரசிடம் செலுத்தப்படும்.
6. மதிப்பு வரி : பொருட்களின் மதிப்பிற்கு தகுந்தவாறு பொருட்களின் மீது விதிக்கப்படும் வரி.
7. நுழைவு வரி (Octroi) : உள்ளூர் சந்தைக்கு வரும் பொருட்களின் நுழைவின் பொழுது அதன் மீது விதிக்கப்படும் வரி.
8. செஸ் (Cess) : வரியின் மீது விதிக்கப்படும் கூடுதல் வரி இது குறிப்பிட்ட ஒரு நலத்திட்டத்திற்காக விதிக்கப்படுகிறது.
9. கூடுதல் கட்டணம் : இது செஸ் போன்றது. ஆனால் ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்காக வசூலிக்கப்படுவதல்ல.
10. டோபின் வரி : உள்நாட்டிலிருந்து வெளிநாட்டிற்கு செல்லும் பணபரிவர்த்தனை மீது விதிக்கப்படும் வரி.
11. எதிர்சமக் கலால் வரி : உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதுகாப்பிற்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீது கூடுதலாக விதிக்கப்படும் வரி.
12. குவித்தலுக்கு எதிரான வரி: இயல்பான விலைக்கு மாறாக குறைந்த விலைக்கு விற்கப்படும் பொதுவாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீது விதிக்கப்படும் வரி.

| ரூபாய் பில்லியனில் | 2014-15 நி.ம. (1) | 2014-15 ம.ம.(2) | 2015-16 நி.ம. | மாற்றங்கள் 15(2) - (1) | வளர்ச்சி 2015 - 16 ந.அ. (3)(2) |
|---|---|---|---|---|---|
| மொத்த வரி வருவாய் | 13,645 | 12,514 | 14,495 | -1,131 | 16% |
| பிற நிறுவன வரி | 4,510 | 4,261 | 4,706 | -249 | 10% |
| வருமான வரி | 2,843 | 2,786 | 3,274 | -57 | 18% |
| சுங்க வரி | 2,018 | 1,887 | 2,083 | -131 | 10% |
| மத்திய கலால் வரி | 2,071 | 1,855 | 2,298 | -216 | 24% |
| சேவை வரி | 2,160 | 1,681 | 2,098 | -478 | 25% |

வருவாய் அதிகரிக்கும் பகுதி. வருவாய் குறையும் பகுதி வரி வருவாய்
0 வரி விகிதம் 25%

12. அட்டவணை மூன்றின் நுழைவதற்கான 35வது விதியின்படி சாலை தானியங்கி வாகனங்கள் அல்லது மனித சக்தி மூலமாக இயங்கும் வாகனங்கள் மற்றும் கம்பிகளால் இணைக்கப்பட்ட தண்டுர்தி (டிராம்) கார்களுக்கான வரிகள்.
13. மிருகங்கள் மற்றும் படகுகள் மீதான வரிகள்
14. சுங்கச்சாவடிகள்
15. தொழில், வர்த்தகம், மற்றும் வேலைவாய்ப்பு மீதான வரிகள்.
16. கொடுக்கப்பட வேண்டிய தொகைக்கான வரிகள்.
17. ஆடம்பர பொருட்கள், வரி அடங்கிய பொழுது போக்குகள், கேளிக்கை, பந்தயம் மற்றும் சூதாட்டத்தின் மீதான வரிகள்.

**விதி368 : (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினை திருத்தம் செய்வதற்கு நாடாளு மன்றத்திற்கு இருக்கும் அதிகாரங்கள்**

1. நாடாளுமன்றம் அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தவோ, சில சட்டங்களை சேர்க்கவோ அல்லது நீக்கவோ முழு அதிகாரம் பெற்றுள்ளது. இதற்கு மேற்படி 368ல் சில நடைமுறைகள் வகுத்துள்ளன.
2. நாடாளுமன்றத்தில் ஏதாவது ஒரு சபையில் மசோதவை அறிமுகம் செய்வதன் மூலம் அரசியல் சாசனத்தின் ஒரு சட்டத்திருத்தம் செய்வதற்கான ஆரம்ப முயற்சியை மேற்கொள்ளளலாம். ஒவ்வொரு சபையிலும் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடனும் நிறைவேற்றப்படுகிறன்ற மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலை பெற்றதும் சட்ட திருத்தம் அமலுக்கு வருகிறது.

கீழ்காணும் திருத்தங்களை செய்ய மேற்படி 368 பயன்படுத்துவது மிக அவசியமானது.

1. "விதி 54, "விதி 55, "விதி 73, "விதி 162 அல்லது "விதி 241",
2. பாடம் Vல் பகுதி 6 அல்லது பாடம் 1ல் பகுதி 11
3. ஏழாவது அட்டவணையில் இடம் பெற்ற பட்டியல்கள்
4. நாடாளுமன்றத்தில் மாநிலங்களை பிரதிநிதித்துவம் செய்தல்

இவையணைத்தும் விதிகளை திருத்தம் செய்ய மாநிலங்களின் எண்ணிக்கையில் பாதிக்கும் குறையாத அளவில் மாநிலங்களில் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி உறுதிச் செய்யப்பட வேண்டும். அதன்பிறகு தான் அந்த சட்டத்திருத்தம் செய்யும் மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

**மாற்றியமைக்கப்பட்ட மதிப்பு கூட்டல் வரி:**

- இந்த வரி ஒரு ஆயத்தீர்வை ஆகும்.
- இது 1986-87ல் வெவ்வேறு பொருட்களின் மீது வெவ்வேறு அளவு வரி விதிக்கப்பட்டது.
- பின்பு 2000-2001ல் அனைத்துப் பொருட்களின் மீதும் ஒரே அளவு வரிகொண்ட மத்திய மதிப்பு கூட்டல் வரியாக இது ஆக்கப்பட்டது.

**மத்திய விற்பனை வரி:**

- இந்த வரியானது இரு மாநிலங்களுக் கிடையேயான வணிகத்தில் விற்பனை செய்யப்படும் அல்லது வாங்கும்

பொருட்களின் மீது விதிக்கப்படும் வரியாகும்.

- இந்த வரி மத்திய மாநிலம் வரியை பெற்றுக் கொள்கிறது.

## சரக்கு மற்றும் சேவை வரி: (GST)

- இந்த வரியானது "ஒரே வரி ஒரே நாடு" என்ற கொள்கையை கொண்டது.
- இந்த வரி மத்திய மறைமுக வரிகளான உற்பத்தி மீதான வரி, சுங்கத்தீர்வை, சேவை வரி என அனைத்தும் இந்த வரியில் உள்ளடக்கியுள்ளது.
- மேலும் மாநில அளவிலான மறைமுக வரிகளான மதிப்பு கூட்டல் வரி, நுழைவு வரி, சொகுசு வரி, பொழுது போக்கிற்கான வரி என அனைத்தையும் உள்ளடக்கியது.
- இந்த வரியானது நேர்முகவரியை ஒரு போதும் பாதிக்காது.
- முதன் முதலில் 2006-07 பட்ஜெட் தாக்கலின் போது இந்த வரியை பற்றிய சிறுகுறிப்பு பேசப்பட்டது.
- பின்னர் இந்த வரி 101வது சட்டத்திருத்தப்படி பாராளுமன்றத்தில் அமலாக்கப்பட்டது.
- முதன் முதலில் ஏப்ரல் 1, 2017-ல் இந்தியாவில் நடைமுறைப்படுத்த முடிவெடுக்கப்பட்டது. பின்னர் ஜூலை 1, 2017-ல் தான் அது நடைமுறைப் படுத்தப்பட்டது.

**வகைகள்:**

**(i) CGST;**
**(ii) SGST;**
**(iii) IGST**

(i) CGST – **மத்திய சரக்கு மற்றும் சேவை வரி:**

- மத்திய அரசு பட்டியலில் உள்ள அனைத்து பொருட்களின் மீதும் இடப்படும் மறைமுகவரியை இவ்வாறு பிரிக்கின்றனர்.

(ii) SGST – **மாநில சரக்கு மற்றும் சேவை வரி:**

- மாநில அளவிலான அனைத்து பொருட்களின் மீதும் இடப்படும் மறைமுக வரியை இவ்வாறு பிரித்து வைக்கின்றனர்.

**(iii) IGST – ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி:**

- இந்த வரியானது இரு மாநிலங்களுக்கு இடையேயான வணிகத்தின் மீது இடப்படுவது.
- அதாவது ஒரு மாநிலம் மற்றொரு மாநிலத்திற்கு பொருட்களை விற்கும் போது அந்த பொருளின் மதிப்பு மீது வரி விதிக்கப்படும்.
- இந்த வரி மத்திய அரசால் விதிக்கப்பட்டு எந்த மாநிலம் விற்பனை செய்கிறதோ அந்த மாநிலம் வரியைப் பெற்றுக்கொள்ளும்.
- இதுவே ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரியாகும்.


## GST-யின் விகிதங்கள்:

- 0%, 3%, 5%, 12%, 18%, 28% மேலும் 40% வரை வரியின் மேல்மட்டம் உள்ளது. இதனை மத்திய அரசும் மாநில அரசின் சரிபாதியாக பிரித்து கொள்கிறது.
- பின்னர் இவ்வரியால் மாநில அரசின் பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டால் அதற்கு இழப்பீடு தருவதாக மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இது 5 வருடங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

**நோக்க வரி:**

- இந்த வரியானது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக வரியின் அளவு மீது விதிக்கப்டும் வரியாகும்.
- எந்த நோக்கத்திற்காக இந்த வரி விதிக்கப்படுகிறதோ அதற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். இதுவே இதன் கருத்தாகும். எ.கா: கல்வி நோக்க வரி, க்ரிஷி கல்யாண் நோக்க வரி.

**லாஃபர் வளைகோடு:**




- இந்த வளைகோட்டின் கருத்து யாதனில், வரிவிகிதம் குறைவாக இருக்கும். பொது வரி வருவாயும் குறைவாக இருக்கும். அதேபோல் வரிவிகிதம் அதிகமாகும் பொழுதும் வரி வருவாய் குறைவாகத்தான் இருக்கும் என்கிறது. ஏனெனில் வரிவிகிதம் அதிகரிக்கும் போது வரி ஏய்ப்பு அதிகமாக இருக்கும். எனவே வரிவிகிதம் மிதமாக இருக்கும் போது மட்டும் வரி வருவாய் அதிகமாக இருக்கும் என்பதே இந்த வளைகோட்டின் கருத்து.